மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இவை அன்றாடம் நடைபெறுகின்ற நிர்வாகத்தை ஒட்டிய அறிக்கைகள். இந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைப்பது என்றால் சட்டமன்றம் வேறு வேலைகளைப் பார்க்க முடியாமல் போய்விடும். அரசு சில தகவல்களை திரட்டித் தரவேண்டுமென்று அதிகாரிகளுக்குப் பணிக்கிறது. அதிகாரிகள் அங்கே ஆய்வு நடத்தி, விசாரணை நடத்தி, சாட்சிகளை கேட்டறிந்து அந்த அறிக்கையை அனுப்புகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் தன்னுடைய கருத்தைச் தெரிவிக்கிறார். அதன்மீது அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் இந்த அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கபட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

(ஆ) கொல்லி மலைப்பகுதியில் பால்வினை நோயை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுத்தல்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம் கொல்லி மலை வாசிகளுக்கு பால்வினை நோய் கண்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லி மலையில் சென்னை மருத்துவக் கல்லூரி பால்வினை நோய் மருத்துவத்துறை பேராசிரியர் தலைமையிலான குழு ஒன்று, சேலம் டேனிடா, மற்றும் ரோட்டரி கிளப் உதவியுடன் இப்பகுதியில் பால்வினை நோய் இருப்பதை ஆய்வு செய்தது. கொல்லி மலையில் மொத்தம் 30,000 மக்கட் தொகை உள்ளது. இதில் ஆண்கள் 16,000; பெண்கள் 14,000 ஆவார்கள். அவர்களில் 6,000 பேர் பருவம் அடைந்தவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களில் 410 பேர்களிடம் குருதி மாதிரி சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதில் 205 குருதி மாதிரிகளில் சிப்லிஸ் (Syphilis) இருப்பது தெரிய வந்தது. எனவே 50 விழுக்காடு பால்வினை நோய் பாசிட்டிவாக உள்ளது. பால்வினை நோய் சம்பந்தப்பட்ட கனோரியா போன்ற மற்ற வகை நோய்கள் 1 விழுக்காடுக்கும் கீழே உள்ளது. எனவே இப்பகுதியில் பால்வினை நோயைக் கட்டுப்படுத்த டேனிடா ஆதரவுடன் அரசுஆணை நிலை எண் 1085, சுகாதாரம், நாள் 29—6—1984ல்

ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பென்சிலின் போன்ற மருந்துகளும், மற்ற நோய் தடுப்பு மருந்துகளும் டேனிடா வினால் இந்நோய் தடுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்குள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வாழவந்தநாடு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இதில் 4 மருத்துவ அதிகாரிகள் பணி புரிகின்றார்கள். மேலும் இப்பகுதி மக்களுக்கு சிகிச்சை அளிக்க 10 சார்பு மருத்துவ நிலையங்கள் உள்ளன. இதனால் இந்நோய் இப்பகுதியில் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்து வருகின்றது. மேலும் இப்பகுதியில் பால்வினை நோயை அறவே ஒழிக்க ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொல்லிமலையில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற் பட்ட மக்கள் வசிப்பதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக் கிறது. அந்த கொல்லிமலைவாழ் பகுதி மக்களுக்கு ஏன் இந்த பால்வினை நோய் வருகிறது என்று ஆய்வு செய்யப்பட்டிருக் கிறதா ? அங்கே 4 மருத்துவ அதிகாரிகளும் 10 சார்பு மருத்துவ நிலையங்களும் இருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார் கள். அது போதாது, மத்திய அரசும் மாநில அரசும் இதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்து அந்த வியாதியைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அவர்களுக்குக் கொடுக்கிற மருந்துகள் P.A.M. (Dumex) ஆக இல்லை. P. A. M. Medicine out of stock. P. A. M. Medicine போன்ற மருந்துகள் அங்கே இல்லை. ஆகவே மருந்துகளை யெல்லாம் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். Hosta cycline, Doxy cycline, Ampi cilline, Penture LA bleks, LA20 laks இப்படி விலையுயர்ந்த மருந்துகளை அவர்களுக்குக் கொடுத்து வியாதிகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, என்ன மருந்துகள் தேவைப்படுகின்றனவோ அந்த மருந்துகள் அங்கே கொடுக்கப்படுகின்றன. அதற்காகத் தனியாக 74 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம், அதுவும்போதாது என்று கூடுதலாக 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆயிரம் பேர்களை நாம் பரிசோதனை செய்திருக்கிறோம். மற்ற விவரங்கள் எல்லாம் அந்த அறிக்கையிலே கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் அங்கே எல்லாவகையான மருந்துகளையும் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி ; துணைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிவப் பிரகாசம் அவர்கள் என்னிடம் ஒரு விளக்கத்தைச் சொன்னார் கள். அந்தக் கொல்லிமலையிலே பிறந்த குழந்தைகளுக்கு எல்லாம் அந்த நோய் வருகிறது என்கிறார்கள். அந்தக் குழந்தைகளையெல்லாம் அரசே வைத்துக்கொண்டு ஒரு தனி

இடத்திலே வைத்து சிகிச்சை அளிக்க முன்வருமா? தாங்களே முன் வந்து இந்த நோயைத் தீர்ப்பதற்கு மருத்துவர்கள் கேட்டால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த வியாதிக்கு சித்தமருத்துவத்திலே நல்ல மருந்துகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சித்த மருத்துவத்திலே அந்த வியாதிக்கு மருந்துகள் இருப்பதாக நமக்கு இதுவரை தகவல் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொரு தகவலையும் நான் சொல்ல விரும்புகிறேன். இதை நாம் கண்டுபிடித்ததே—ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே இரண்டு மாவட்டங்களிலே டென்மார்க் நாட்டின் உதவியோடு நடத்தப்பட்டு வரும் டேனிடா திட்டம் என்ற அந்தத் திட்டத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் கொடுத்திருக்கின்ற பல்வேறு உபகரணங்களின் மூலமாக ' இன்புட்ஸ்'' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோமே, அவைகளின் மூலமாக இவைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இந்த நிலைமை கட்டுக்கடங்கி, நல்ல நிலைமையில் சமாளித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னொரு தகவலையும் சொல்லியிருக்கிறார்கள். பிறந்த குழந்தைகளுக்குகூட இந்த நோய் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நியாயமான கேள்விதான். Syphilis என்ற வியாதி பிறக்கும் குழந்தைகளுக்குக்கூட வரும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் குழந்தைகளைப் பரிசோதித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தேவைப்பட்டால் சமூக நல இலாக்காவின் மூலம் என்ன செய்யலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் தயாராக இருக்கிறோம்; ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னால் அவர்களுக்கு அது ஆறுதலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவரின் சார்பாக அளிக்கிறேன்:

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.